# வாழ்க்கை மாற்றமடைந்துள்ளது



For every child
Health, Education, Equality, Protection
ADVANCE HUMANITY

unicef




மீனா எனப்படும் சிறுமி, தனது பெற்றோருடனும் பாட்டியுடனும் சகோதரன் ராஜுவுடனும் தங்கையான குழந்தை ராணியுடனும் கிராமமொன்றில் வாழ்ந்து வருகிறாள். மித்து எனப்படும் கிளி மீனாவின் நெருங்கிய தோழியாகும்.


மீனா பலவழிகளிலும் உங்களுக்குத் தெரிந்த ஏனைய சிறுமிகளைப் போன்றே இருப்பாள். அவள் நட்புடன் பழகுவாள் ஆயினும் வினாக்களைக் கேட்பதற்கு பயப்படமாட்டாள்.

மீனா சிரிக்கும்போது, மரங்களில் ஏறும்போது, வினாக்களைக் கேட்கும் போது, பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது, சிறுமியொருவளினால் செய்யக் கூடிய அனைத்தையும் காட்டும் போது அவளது தீரச் செயல்களில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.

மீனாவின் கிராமத்தில் அன்று ரம்மியமான காலை வேளை. ஆசிரியை தாவரங்கள் பற்றிய பாடமொன்றை கற்பித்துக் கொண்டிருக்கிறார்.



சடுதியாக நிலம் நடுங்கத் தொடங்குகிறது. வகுப்பறை யன்னல்கள் அதிருகின்றன. வெள்ளாட்டுக் கொட்டில் விழுகிறது. அது ஒரு நிலநடுக்கமாகும்!




பூசணிக் கொடி படருவதற்கு ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ள மூங்கில் தடிகளும் உடைந்து விழுவதுடன் பூசணிக் காய்களும் விழுந்து வெடிக்கின்றன.




மீனா, அவளின் சகோதரனான ராஜு, அவர்களின் வகுப்பு நண்பர்கள் ஆகிய எல்லோரும் மிகவும் பயந்து விட்டனர். ஆசிரியை அவர்களை அமைதியாக வைத்திருக்க முயற்சிக்கிறார். மீனாவின் செல்லப் பிராணியான மித்து எனும் கிளியும் கூட பயப்படுகிறது.



மீனாவின் தகப்பனார் பிள்ளைகளைக் கூட்டிச் செல்ல விரைந்து வருகிறார். மற்றைய இடங்களில் நிலநடுக்கம் மிக மோசமாயிருந்கது எனக் கூறுகிறார்.




வீடு செல்லும் வழியில் மீனாவும் ராஜுவும் நில நடுக்கம் காரணமாக விழுந்திருந்த சில வீடுகளையும் மரங்களையும் காண்கின்றனர்.



ராஜு அன்றைய தினம் பார்த்த எல்லாவற்றையும் பாட்டியிடம் கூறுவதற்கு விரைகிறான்.



மற்றைய கிராமங்களிலுள்ள அநேக மக்கள் தமது வீடுகளையும் இழந்து காயமடைந்துள்ளரென மீனாவின் தகப்பனார் குடும்பத்தினருக்குக் கூறினார்.



அடுத்த நாள் காலை குடும்பத்தினர் சில அறிமுகமில்லாதவர்களை அரசாங்கக் கட்டடத்தில் காணுகின்றனர். அவர்கள் புகலிடம் தேடி இரவு நேரத்திலேயே வந்து விட்டனர்.



ஆசிரியையும் சுகாதாரப் பணியாளரும் ஏற்கனவே மக்களுக்கு உதவுகின்றனர்.



சுகாதார முறையில் அமைக்கப்பெற்ற மலசல கூடங்களைப் பாவிப்பதன் முக்கியத்துவம் பற்றி ஆசிரியை மக்களுக்கு கூறுகின்றார். குடிப்பதற்கு பாதுகாப்பான நீரை கைப்பும்பகளிலிருந்து பெற முடியுமெனவும் அவர்களுக்குத் தெரிவிக்கின்றார்.




நோய்வாய்ப்பட்டிருக்கும் அல்லது சிகிச்சை தேவைப்படும் எவருக்கேனும் சுகாதாரப் பணியாளர் உதவுகிறார்.




சிறுமியொருவள் யன்னலருகே நிற்பதை மீனா காண்கிறாள். அவள் அச்சிறுமியுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறாள்.




அவள்முகத்தை திருப்பி வைத்திருக்கிறாள். எவருடனும் அவளுக்கு பேச விருப்பமில்லை. மீனா கவலைப்படுகிறாள்.



வீட்டில் ராஜு நிலநடுக்கம் ஏன் ஏற்படுகிறதென பாட்டியைக் கேட்கிறான். நாங்கள் வாழும் நிலப்பகுதி எப்பொழுதும் மெதுவாக நகர்ந்து கொண்டிருப்பதால் சில வேளைகளில் நிகழமுடியுமென பாட்டி கூறுகிறார்.



நிலநடுக்கம் போன்றவற்றையிட்டு சிறுவர்கள் மட்டுமே பயப்படுகின்றார்களாவென மீனா தெரிந்து கொள்ள விரும்புகிறாள். மக்கள் ஆயத்தமாயிருக்காதபோது நிகழும் சம்பவங்களையிட்டு எல்லோருமே பயப்படுவார்களென தகப்பனார் விளக்கமளித்தார்.



மீனா உண்மையிலேயே பயந்து விட்டாளென்பது தகப்பனாருக்குத் தெரியும். எனவே அவர் அவளை தனது மடியிலிருத்தி அணைத்துக் கொள்ளுகிறார். அவளுக்காக தான் எப்பொழுதும் அங்கிருப்பதற்கு முயற்சிப்பாரென அவளுக்கு கூறுகிறார்.



ஓர்சில நாட்களின் பின்னர், ஆசிரியர் முகாமிலுள்ள சிறுவர்களை தன்னுடன் பாட சாலைக்கு அழைத்து வந்திருந்தார்.



அச்சிறுமியின் பெயர் நீலா என்பதைமீனா அறிந்து கொண்டாள். மீண்டும் அவளுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறாள். ஆயினும் திரும்பவும் ஒருமுறை நீலா மறுபக்கம் திரும்பிக் கொள்கிறாள்.



ஓரிரு நாட்களில் பெரும்பாலான புதிய பிள்ளைகள் தங்களை இசைவாக்கிக் கொண்டனர். தங்களுடைய கதைகளை வகுப்பில் கூறுமாறு ஆசிரியை அவர்களைக் கேட்கின்றார்.



நிலநடுக்கம் ஏற்பட்டு அணை உடைந்தபோது தான் வள்ளமொன்றில் இருந்ததாக வகுப்பிலுள்ளவர்களுக்குக் கூறுகிறான். அவன் நீருக்குள் வீசப்பட்டான். அவன் பயந்து விட்டான் ஆயினும் மிதப்பதற்காக மரத்துண்டொன்றைப் பற்றிக் கொண்டான். இறுதியில் அவனுடைய தகப்பனார் அவனை மீட்டார்.



ரூபி எனப்படும் இன்னொரு சிறுமியும் தனது கதையை கூற விரும்புகிறாள்.



நிலநடுக்கம் ஏற்பட்டபோது அவள் வீட்டில் தனியாகவே இருந்தாள். அவள் வெளியே ஒடியபோது எல்லா இடங்களிலும் மக்களைக் கண்டாள். அவள் பயத்தினால் அவர்களுடன் சேர்ந்து ஒடி இறுதியில் திகைத்து நின்றாள். இறுதியாக கருணைமிக்க பெண்ணொருவள் அவளை வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.



நீலா ஒருவருடனும் பேசாமலோ அல்லது விளையாடாமலோ இருப்பதற்குரிய காரணத்தை அறிவதற்கு மீனா ஆவலாயிருந்தாள். நீலா தனது குடும்பத்தினரிடமிருந்து பிரிந்து சென்றதையும், அவளின் கிராமத்தினது பெயர் அவளுக்குத் தெரியாது என்பதையும் ஆசிரியை மீனாவுக்குக் கூறுகின்றார்.



அடுத்த நாள் ஒரு விடுமுறை நாளாகும். நீலா மரமொன்றின் கீழிருந்து வரைந்து கொண்டிருப்பதையும் சிறிது நேரத்தின்பின் டில்லின் தாயார் அங்கு வருவதையும் மீனா காண்கின்றாள். மீனா அவர்களிருவரையும் அவளுடைய வீட்டுக்கு வருமாறு அழைக்கிறாள்.



வீட்டில் மீனாவின் குடும்பத்தினரால் காட்டப்பட்ட கருணையும் அன்பும் முதல் முறையாக நீலாவை புன்னகை புரியச் செய்தது.




நீலா தனது சித்திரங்களை அவர்களுக்குக் காட்டுகிறாள். நிலநடுக்கம் ஏற்பட்டபோது அவள் தனது பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டாள். தனது பாட்டி மீது மரம் விழுந்ததினால் அவள் கொல்லப்பட்டதையும் பார்த்திருந்தாள்.




தாயாரும் பாட்டியும் அச்சிறுமியைக் கட்டியணைக்கின்றனர். பேசிக்கொண்டிருப்பது உதவ முடியுமாகையால் அவள் எப்பொழுதும் வந்து தங்களுடன் பேசிக் கொண்டிருக்கலாமென அவளுக்குக் கூறுகின்றார்.




சில நாட்களின் பின் பாடசாலை முடிவடைந்ததும் மீனா, ராஜு, நீலா ஆகிய மூவரும் கடைக்குப் போகின்றனர். அங்கே நீலா தனது படத்தை பத்திரிகையில் பார்க்கிறாள். அதன் கருத்து என்னவாயிருக்கும்?



நிலநடுக்கத்தின் பின்னர் காணாமல் போன மக்களின் படங்கள் செய்தித்தாளில் வெளிவந்துள்ளதாக மீனா நீலாவிடம் கூறுகிறாள். இது ஒரு நல்ல செய்தி!




உணர்ச்சிவசப்பட்ட பிள்ளைகள் இச்செய்தியை தகப்பனாரிடம் சொல்வதற்காக ஒடுகின்றனர். அவர் நீலாவின் பொற்றோரிடம் அவள் இருக்குமிடத்கை தெரிவிக்குமாறு ஆசிரியையிடமும் கிராம உத்தியோகத்தரிடமும் கூறுகிறார்.



மீனாவின் தகப்பனார் பிள்ளைகளைக் கூட்டிச் செல்ல விரைந்து வருகிறார். மற்றைய இடங்களில் நிலநடுக்கம் மிக மோசமாயிருந்தது எனக் கூறுகிறார்.



சூரியன் மறையத் தொடங்குகையில் நீலா சத்தமிட்டுக் கொண்டு தனது தகப்பனாரின் கரங்களுக்குள் வேகமாக ஓடிச் செல்கிறாள். அவளின் தாயாரும் சகோதரியும் அங்கு நிற்கின்றனர். அவர்கள் பத்திரமாக உள்ளனர்!



அச்சிறுமிக்கும் அவளின் உற்ற நண்பியாகவிருந்த மீனாவுக்கும் அது எத்துணை மகிழ்ச்சிகரமரன நாள்!



நீலாவை தேற்றுவதற்கு எம்மாதிரியான விடயங்களை நீங்கள் கூறுவீர்கள்?



இப்படத்துக்கு வர்ணம் தீட்டுக.



Script:
Nuzhat Shahzadi

In consultation with:
Rachel Carnegie
Martin Dawes

Creative team:
Surani Abeyesekera
Binita Shah
Shailaja Maru

Research :
Dr Mira Aghi

Technical consultations:
Cindy Dubble, Unicef - Colombo
Harini, Unicef - Colombo
Medical students and volunteers trained and working on psychosocial healing - Galle
Luc Chauvin, Unicef - ROSA
Susan Durston, Unicef - ROSA
Serap Maktav, Unicef - ROSA
Anthony Raby, Unicef - ROSA

Story board and design:
Ram Mohan

Comic book adaptation:
Deepa Balsavar
Vividh Tamore

DTP & Layout :
Srinivas Vaishnav
Santosh Gawade

Sponsored by:
Government of Japan

Project management:
UNICEF-ROSA, 2005




*UNICEF Regional Office for South Asia gratefully acknowledges the support from the Government of Japan that made this production possible. The story was developed with the help of children in Sri Lanka who survived the 2004 Indian Ocean Tsunami disaster.*

Other titles in this series

1. Count Your Chickens
2. Dividing the Mango
3. Will Meena Leave School?
4. Take Care of Girls
5. Who's Afraid of the Bully?
6. Saving a Life
7. Meena's Three Wishes
8. Say No to Dowry
9. Too Young to Marry
10. I Love School
11. It's Got to Be a Boy!
12. A Girl's Story
13. Meena in the City
14. Strangers in the Village
15. Learning to Love
16. Reaching Out
17. Meena and her Friend
18. It Could Happen to Anyone
19. When Meena was Born
20. When Meena was a Little Girl
21. Seeing in the Dark
22. Health in Your Hands
23. Safe from Worms
24. Bany Rani's Four Visits
25. We Love Books!
26. Learning can be Fun!
27. Learning with Meena
28. School First, Marriage Later
29. Teacher Helps to Learn
30. Let's Go to School Together
31. Fair Play for Girls

இவற்றுடன் கிடைக்கக் கூடியன:
மீனா கல்வி கார் தயாரிப்புகள்
வீடியோ நாடாக்கள்
வானொலி தொடர்கள்

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள:
நிகழ்சிதிட்ட தொடர்பாடல் பிரிவு,
ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்,
இல: 5, கீதாஞ்சலி இடம்,
காலி வீதி, கொழும்பு - 3,
இலங்கை.
தொலைபேசி: 2555270
தொலைநகல்: 2551333
மின்னஞ்சல்: colombo@unicef.org
இணையத்தளம்: www.unicef.org

Copyright © 2005

unicef

Reprinted in Sri Lanka@2006
2006ல் இலங்கையில்
மீள்பதிப்புரிமை செய்யப்பட்டது.